மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றையதினம் என்னிடத்திலேயும், குடிநீர் வடிகால் வாரியத் தலைவரிடத்திலேயும் பேசியபோது இதுசம்பந்தமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட வருவாய் அலுவலருக்கும் நினைவூட்டுக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, தலைமையிடம் அமைப்பது சம்பந்தமாக, நிலம் எடுப்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறையிடம் நிச்சயமாக, வருவாய் அலுவலர்கள் பேசி, அதன் மீது மேல்நடவடிக்கை எடுத்து, இந்தத் திட்டம் நிதிநிலைமைக்கேற்ப செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 178, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

178—

மீனவர்களுக்கு கடன் வழங்குதல்

****84652-திரு. ஆர். சிங்காரம்:***

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கடற்கரை மீனவர் மகளிர் சங்கத்திற்கு கடன் வழங்கவும், மீனவர் துயர் துடைப்பு நிதியை மானியத்துடன் தாமதமின்றி மீனவர்களுக்கு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீன்துறை மூலம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் 1994-95-ஆம் ஆண்டில் உறுப்பினர்கள் செலுத்திய சந்தாத் தொகைக்கு இணையாக மத்திய மற்றும் மாநில அரசின் நிவாரணத் தொகை 25,351 மீனவர்களுக்கு

1996 மார்ச் 1]

இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சத்து, எழுபத்தெட்டாயிரத்து எண்பது ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1995-96 ஆண்டைப் பொறுத்தவரையில் 30,577 மீனவர்களுக்கு ரூபாய் மூன்று கோடியே முப்பது இலட்சத்து இருபத்துமூன்றாயிரத்து நூற்று அறுபது ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், அதிலே சில கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன. அதையும் சேர்த்துத்தான் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். இந்தக் கேள்வி கேட்டு சுமார் 2 ஆண்டு காலமாகிவிட்டது. அதன் பிறகு கடன் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு இருந்தாலும், ஏரிபுறக்கரை போன்ற கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன. ஆகவே, அந்த கிராம மக்களுக்கும் இந்த ஆண்டே வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். 1995-ஆம் ஆண்டு நாகை-காயிதே மில்லத் மற்றும் தஞ்சை ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டத்திலே சேர்ந்திருக்கின்ற மீனவர்கள் 25,351 பேர். இந்தத் திட்டத்திற்கு அதிகமான அளவிற்கு அரசு எடுத்த ஊக்கம் காரணமாக, நம்முடைய மீனவர்கள் அதனை வரவேற்றதன் காரணமாக 1995-96-ஆம் ஆண்டு ஏறக்குறைய 30,577 மீனவர்கள் இதிலே சேர்ந்து இருக்கின்றார்கள் என்றால், ஏறக்குறைய 5 ஆயிரம் மீனவர்கள் ஒரு ஆண்டிலேயே இந்தத் திட்டத்திற்கு வரவேற்பினை தந்து, இந்தத் திட்டத்திலே சேர்ந்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது எந்த அளவுக்கு துறை நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதன்மூலம் அறிந்துகொள்ளமுடியும். ஏரிப்புறக்கரை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்து, அவர்கள் அந்தத் திட்டத்திலே மாதந்தோறும் 8 மாதத்திற்கு 45 ரூபாய் செலுத்தினால்தான், நாங்கள் அதற்கு இரண்டு மடங்கு தொகை கொடுக்க முடியும். அவர்கள் 45 ரூபாய் செலுத்தினால் அதற்கு ஈடாகக் கொடுப்பதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு ஆபத்து என்றால், மீனவர்களுக்கு கஷ்டம் என்றால், பாய்ந்து வந்து உதவுவது தமிழக அரசு மற்றும் நம்முடைய மாண்புமிகு

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அதே நேரத்தில் சில சில இடங்களில், சில சில பிரச்சினைகள் எழுகின்றன. அந்தப் பிரச்சினையைத்தான் தங்களிடத்திலே நான் சுட்டிக்காட்டினேன். ஏரிப்புறக்கரை கிராமத்தில் நீங்கள் சொன்ன அந்த 45 ரூபாய் கட்டப் பட்டிருக்கிறது. அந்தத் தொகை கட்டப்பட்டிருந்தும் கூட அவர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. ஏரிப்புறக் கரை, புதுப்பட்டினம் போன்ற கிராமங்களையும் சேர்த்து, இந்தத் துயர்துடைப்பு மானியத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பாக இந்தத் திட்டத்திலே ஏறக்குறைய 9 ஆயிரம் மீனவர்கள்தான் சேர்ந்திருந்தார்கள். ஆனால் படிப்படியாக இப்போது ஏறக்குறைய நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக 1,75,000 மீனவர்கள் இந்தத் திட்டத்திலே சேர்ந்து, தமிழகம் முழுமையுமே, ஏறக்குறைய 442 கிராமங்களும் முழுமையான அளவிற்கு பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். 1995-96-ஆம் ஆண்டிற்கு மட்டும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் 11 கோடி ரூபாயை மானியமாக வழங்கி இருக்கிறார்கள். ஏரிப்புறக்கரை மீனவ கிராமத்திலிருந்து இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று எந்த மனுவும் வரவில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை ஏற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 179, திரு. என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

179—

அறங்காவலர்கள் நியமனம்

*38186—திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—